No. of Printed Pages : 4

11651

**4627**

Register Number | | | | | | |

2020

**First Year**

# சமூக அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SOCIAL SCIENCE

(Tamil Version)

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு – அ

## (பாடப்பொருள்)

பின்வரும் வினாக்கள் **அனைத்திற்கும் 100** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** தென்னிந்தியக் கல்வி முறை – சிறு குறிப்பு வரைக.

**2.** சார்லஸ் உட்ஸ் அறிக்கை (1854) -யின் முக்கிய அம்சங்கள் யாவை ?

**3.** முகப்பு அறிவிக்கும் தத்துவ நோக்கங்கள் யாவை ?

**4.** மகளிர் மேம்பாட்டிற்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

**5.** நெருக்கடி நிலை அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுக.

**6.** மக்களவை உறுப்பினர்க்குரிய தகுதிகள் யாவை ?

**7.** தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்ட திருத்தம் – 2006 பற்றி சிறு குறிப்பு வரைக.

**8.** மலைகளின் நான்கு பிரிவுகளை குறிப்பிடுக.

9. இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள நிலநடுக்கக் கண்காணிப்பு மையங்களின் பெயர்களை எழுதுக.

10. பருவ காலங்கள் என்றால் என்ன ? நான்கு பருவங்களை குறிப்பிடுக.

## பிரிவு – ஆ
## (கற்பிக்கும் முறை)

**கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் 100 சொற்களில் விடையளிக்கவும்.**

11. சமூக அறிவியலின் வரம்பு பற்றி கூறுக. **10x2=20**

12. சமூக வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு பற்றி எழுதுக.

13. செயல்திட்ட முறையின் நோக்கங்கள் யாவை ?

14. அட்சக் கோடுகள், தீர்க்கக் கோடுகளின் முக்கியத்துவத்தை எழுதுக.

15. 'நிலவரைபடங்கள்' என்பதன் பொருள் யாது ?

16. நிலவரைபடங்களில் கடல் மற்றும் நிலத்தோற்றங்களுக்கு பயன்படுத்தப்படும் வண்ணங்களை குறிப்பிடுக.

17. கருத்தரங்க அமைப்பாளர்களின் பொறுப்புகளைப் பட்டியலிடுக.

18. தொடக்கப்பள்ளி சார்ந்த கருத்தரங்கத் தலைப்புகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

19. களப் பயணத்தின் வகைகளை எழுதுக.

20. குழு அட்டைகள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

## பகுதி - II
## பிரிவு - அ
## (பாடப்பொருள்)

**கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடையளிக்கவும்.** **5x4=20**

21. மனித வாழ்வின் கல்வி வளர்ச்சியில் வேத கால கல்வி முறையும் அவற்றின் பங்களிப்புகள் பற்றியும் சுருக்கமாக விவரிக்கவும்.

22. மனித வாழ்வின் அரசியல் வளர்ச்சியில் சோழர்கால வரலாற்றின் தாக்கம் பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

23. காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் அறநெறிக் கோட்பாடுகள் பற்றி விவரிக்கவும்.

24. அடிப்படை உரிமைகள் எவையேனும் இரண்டினை அதன் சரத்துடன் எழுதவும்.

25. மக்களவை சபாநாயகரின் அதிகாரங்களும் பணிகளும் பற்றி விவரி.

26. இந்திய நாட்டின் மூன்றடுக்கு ஆட்சியமைப்பைபற்றி விவரித்து எழுதுக.

27. பீடபூமிகள் என்றால் என்ன ? அவற்றின் வகைகள் பற்றி எழுதுக.

28. நிலநடுக்கம் ஏற்படுவதற்கான காரணங்களை விவரிக்கவும்.

## பிரிவு – ஆ
## (கற்பிக்கும் முறை)

பின்வரும் வினாக்களில் **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு **200 சொற்களில்** விடையளிக்கவும்.

**5x4=20**

29. தொடக்கக் கல்வி நிலைகளில் சமூக அறிவியல் கற்பித்தலின் நோக்கங்களை எழுதுக.

30. செயல்திட்ட முறையில் ஆசிரியரின் பங்கு பற்றி எழுதுக.

31. நில வரைபட அளவைகளைக் குறிப்பிடும் முறைகள் பற்றி விவரிக்கவும்.

32. சமூக அறிவியல் கற்பித்தலில் கருத்தரங்கின் நோக்கங்கள் பற்றி விவரிக்கவும்.

33. களப் பயணத்தின் இலக்குகள் பற்றி எழுதக.

34. சமூக அறிவியல் கற்பித்தலில் களப்பயண பார்வையிடக் கூடிய இடங்களை பட்டியலிடுக.

35. செயல்வழிக் கற்றலின் அணுகுமுறைகள் பற்றி விவரிக்கவும்.

36. செயல்வழிக் கற்றலில் ஆரோக்கிய சக்கரத்தின் செயல்பாடுகள் பற்றி விவரிக்கவும்.

## பகுதி - III

37. (அ) கொடுக்கப்பட்டுள்ள உலக புறவரி (World outline) நில வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும். அதனைத் தொடர்ந்து வரும் வினாவிற்கு 500 சொற்களில் விடையளிக்கவும். **2x10=20**

(i) பின்லாந்து
(ii) நார்வே
(iii) கடக ரேகை
(iv) கிரின்விச் தீர்க்கக் கோடு
(v) பிலிப்பைன்ஸ்
(vi) நாகசாகி
(vii) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
(viii) மெக்சிகோ
(ix) ஹட்சன் விரிகுடா
(x) சோமாலியா

(ஆ) தேசிய வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு பற்றி விவரிக்கவும்.

**அல்லது**

(இ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய புறவரி (India outline) நில வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும். அதனைத் தொடர்ந்து வரும் வினாவிற்கு 500 சொற்களில் விடையளிக்கவும்.

(i) மலபார் கடற்கரை
(ii) டேராடூன்
(iii) போபால்
(iv) மும்பை
(v) விசாகப்பட்டினம்
(vi) பாக் ஜல சந்தி
(vii) கொல்கத்தா
(viii) ஹீராகுட் அணை
(ix) சென்னை
(x) பூடான்

(ஈ) செயல்வழிக் கற்றலில் வகுப்பறை நிர்வாகம் பற்றி விளக்குக.

38. (அ) கருத்தரங்கை நடத்துவதிலுள்ள படிநிலைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) நிலவரை படங்களின் பயன்பாடுகள் பற்றி விவரிக்கவும்.

-oOo-